# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **விஜயநகர பேரரசு மற்றும் பாமினி அரசு**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**,

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# விஜயநகர பேரரசு (கிபி.1336 - 1672)

- விஜயநகர பேரரசினை உருவாக்கியவர்கள் **ஹரிஹரா் மற்றும் புக்கா்**.
- **கி.பி.**1336 இல் துங்கபத்திரா ஆற்றின் தென் கரையில் விஜயநகர அரசினை உருவாக்கினர்.
- விஜயநகர பேரரசின் தலைநகரம் **ஹம்பி**.
- இப்பேரரசு **சங்கம**, **சாளுவ**, **துளுவ**, **அரவீடு** என்னும் நான்கு மரபினர்களால் ஆளப்பட்டது.
- கிபி,1336 இல் முதலாம் **ஹரிஹரா்** ஆட்சிக்கு வந்தார்.
- கிபி.1356ல் **முதலாம் புக்கா்** விஜயநகர பேரரசினை ஆட்சிசெய்தார்.
- இப்பேரரசின் சிறப்புக்குரிய மன்னர்கள் **இரண்டாம் ஹரிஹரா்**, **முதலாம் தேவராயா்**, **இரண்டாம் தேவராயா்**, **கிருஷ்ணதேவராயா்** ஆகியோர் ஆவார்.

## கிருஷ்ணதேவராயா்

- விஜய நகரத்தின் மிகச்சிறந்த பேரரசர்.
- துளுவ மரபினைச் சேர்ந்தவர்.
- போர்த்துக்கீசியர்களுடன் நட்புறவினை மேற்கொண்டார்.
- தாம் வைணவராக இருந்தபோதிலும் அனைத்து சமயங்களையும் மதித்து நடந்தார்.
- கலை, இலக்கியப் புரவலராகவும் திகழ்ந்ததால் 'ஆந்திரபோஜர்" என்று அழைக்கப்பட்டார்.
- கிருஷ்ணதேவராயா் முழு நிறைவான அரசா் என்று வரலாற்று அறிஞர் **டோமிங்கோபயஸ்** குறிப்பிட்டுள்ளார்.
- தனது பட்டத்தரசி நாகலாதேவியின் நினைவாக நாகலாபுரம் என்ற புதிய நகரை நிர்மானித்தார்.

Ø விஜயநகரப் பேரரசில் **ஹசராசாமி கோயிலும்**, **விட்டலசாமி ஆலயமும்**, கோயில் கட்டுமான கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.

Ø உலோக உருக்குக்கள் சிறப்பிற்கு கிருஷ்ணதேவராயர் சிலையே ஒரு மகுடமாகும்.

Ø கிருஷ்ணதேவராயர் தெலுங்கில் எழுதிய நூல் **அமுக்-தமால்யதா**. மேலும், அவர் **உஷாபரிணயம்**, **ஜாம்பவதி கல்யாணம்** ஆகிய சமஸ்கிருத நூல்களையும் எழுதியுள்ளார்.

Ø கிருஷ்ணதேவராயர் அவையில் அஷ்டதிகஜங்கள் எனப்படும் 8 அறிஞர்கள் இடம் பெற்றிருந்தனர்.

Ø **விட்டலசாமி கோயில்** தூண்கள் தட்டினால் இசை எழுப்பும் இயல்புடையதாகும். இத்தூண்கள் **இசைத்தூண்கள்** அல்லது **சரிகம தூண்கள்** என அழைக்கப்படுகின்றன. இக்கோயில் கிருஷ்ணதேவராயர் காலத்தில் கட்டப்பட்டது.

Ø **இவருக்குப் பின் அச்சுதர்**, **வெங்கடர் ஆகியோர் அரியணை ஏறினர்**.

Ø தலைக்கோட்டைப் போர் நடைபெற்ற ஆண்டு **கி**.**பி**-.1565

Ø இப்போர் 'ரக்ஷா தங்கடி" என்றும் அழைக்கப்படுகிறது.

Ø விஜய நகர அரசின் கடைசி அரசர் இரண்டாம் ஸ்ரீரங்கர் ஆவார்.

**<u>ஆட்சிமுறை</u>**

- Ø பேரரசு பல மண்டலங்களாகவும் , மண்டலங்கள் பல நாடுகளாகவும் , நாடு பல ஸ்தலங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது.
- Ø ஸ்தலம் என்பது பல கிராமங்களைக் கொண்டிருந்த பிரிவாகும்.
- Ø மண்டலத்தின் ஆளுநர் மண்டலேஸ்வரர் அல்லது நாயக் என்று அழைக்கப்பட்டார்.
- Ø ராணுவத்தின் உயரதிகாரிகள் நாயக் அல்லது பாளையக்காரர் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் ஆற்றும் பணிக்கு ஈடாக

நிலங்கள் வழங்கப்பட்டன. இந்நிலங்கள் ‘அமரம்” என்று அழைக்கப்பட்டது.

**சமூக வாழ்க்கை**

- Ø பிராமணர், ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு ஜாதிப்பிரிவுகள் இருந்ததாக அல்லசானி பெத்தண்ணா தமது மனுசரித்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.
- Ø மகளிர் நிலையில் முன்னேற்றம் இல்லை.
- Ø குமார காம்பணரின் மனைவி கங்கா தேவி மதுரா விஜயம் என்ற நூலை இயற்றினார்.
- Ø ஹன்னம்மா, திருமலம்மா இருவரும் அக்காலத்தில் புகழ் வாய்ந்த பெண்புலவர்கள்.
- Ø தேவதாசி முறை வழக்கத்தில் இருந்ததாக பயஸ் குறிப்பிட்டுள்ளார்.
- Ø சதி வழக்கம் பெருமையாகக் கருதப்பட்டது.

**பொருளாதார நிலை**

- Ø விஜயநகரம் புகழ்பெற்ற வர்த்தக நகரமாக விளங்கியது.
- Ø முக்கிய தங்க நாணயம் வராகன் என்பதாகும்.
- Ø கண்ணனூர் துறைமுகம் குறிப்பிடத்தக்கதாகும்.
- Ø கப்பல் கட்டும் தொழில் வளர்ச்சியடைந்திருந்தது.

## பாமினி அரசு (கி.பி.1347 - 1526)

Ø பாமினி அரசை தோற்றுவித்தவர் அலாவுதீன் பாமன்ஷா. இவர் **ஹசன்கங்கு என்றும் அழைக்கப்பட்டார்**.

Ø பாமினி அரசு உருவாக்கப்பட்ட ஆண்டு **கி.பி.**1347.

- இதன் தலைநகரம் குல்பர்கா.
- பாமினி அரசை மொத்தம் 14 சுல்தான்கள் ஆட்சி புரிந்தனர்.
- அவர்களில் அலாவுதீன் பாமன்ஷா , முதலாம் முகமது ஷா, பிரோஸ் ஷா ஆகியோர் சிறப்பு வாய்ந்தவர்கள். பின்னர் அகமதுவாலிஷா என்பவர் தலைநகரை குல்பர்காவிலிருந்து பீடாரக்கு மாற்றினார்.
- மூன்றாம் முகமதுஷாவின் ஆட்சிக்காலத்தில் பாமினி அரசின் புகழ் அதன் உச்சிக்கு சென்றது.
- முகமது ஷா வின் வெற்றிக்கு காரணம் அவரது அமைச்சராக விளங்கிய முகமது காவன் என்பவரின் ஆலோசனைகளும் சேவைகளுமேயாகும்.

**முகமது காவன்**

- பாரசீக வணிகர்.
- தனது தனிப்பட்ட ஆளுமையினால் பாமினி சுல்தானியத்தின் முதலமைச்சரானார்.
- முகமது காவனின் மறைவுக்குப்பிறகு பாமினி அரசு வீழ்ச்சியடையத் துவங்கியது.
- 1526 ஆம் ஆண்டு வாக்கில் பாமினி அரசு ஐந்து சுதந்திர சுல்தானியங்களாக சிதறுண்டன.
- அகமது நகர், பீஜப்பூர், பீரார், கோல்கொண்டா,பீடார் என்ற ஐந்தும் தக்காண சுல்தானியங்கள் என்று அழைக்கப்பட்டன.

**நிர்வாகம்**

- பாமினி அரசின் நிர்வாகம் நிலமானியமுறையில் அமைந்தது. நாடு பல மாநிலங்களாக பிரிக்கப்பட்டு **தராஃபுகள்** என அழைக்கப்பட்டன.

Ø பீஜப்புரில் உள்ள **கோல்கும்பாஸ்** கட்டடம் **முணுமுணுக்கும்** அரங்கம் என்ற சிறப்பைப் பெற்றது.

Ø **கோல்கொண்டாக் கோட்டை** நுழைவாயிலில் எழுப்பும் கரவொலி மலையின் மேல்பகுதி வரை தெளிவாக கேட்பது இதன் தனிச்சிறப்பாகும்.

Ø விஜயநகர அரசர்களுடன் தொடர்ச்சியாக போர்கள், மூன்றாம் முகமதுஷாவுக்குப்பின்னர் திறமையற்ற அரசர்களின் ஆட்சி, அயல்நாட்டு பிரபுக்களின் கலகங்கள் போன்றவை பாமினி அரசின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தன.

*********